வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office

Tele Fax : 0461-2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

Press release :3 date: 26.05.2021

**VOC Port inks MoU with National Technology Centre for Ports Waterways & Coasts (NTCPWC), IIT Madras, for Development of Indigenous Vessel Traffic Software**

Today on 26.05.2021, V.O Chidambaranar Port Trust, Tuticorin, signed a Memorandum of Understanding (MoU) with National Technology Centre for Ports Waterways & Coasts (NTCPWC), IIT Madras, the technology arm of the Ministry of Ports, Shipping and Waterways, for Operation, Manning and Maintenance of Vessel Traffic System & Development of Indigenous Vessel Traffic Software at V.O Chidambaranar Port Trust, Tuticorin.

The MoU was signed on behalf of V.O. Chidambaranar Port Trust by, Capt Pravin K. Singh, Deputy Conservator, V.O. Chidambaranar Port Trust, and on behalf of National Technology Centre for Ports Waterways & Coasts, by Prof. K Murali, Professor In-charge, NTCPWC, in the presence of Shri T.K. Ramachandran, IAS, Chairman, Shri Bimal Kumar Jha, Deputy Chairman, V.O. Chidambaranar Port Trust, and Professor Bhaskar Ramamurthi, Director, IIT, Madras, other senior officials of V.O. Chidambaranar Port and NTCPWC, through Video conferencing. The duration of the MoU for maintenance & updating of the entire system shall be for a period of five years, extendable by another five years.

On signing of the MoU, NTCPWC would maintain the existing Vessel Traffic Service, develop indigenous Vessel Traffic System software for VOC Port, that would facilitate identification, tracking, analysis of shipping traffic, real-time information for Pilots, monitoring of meteorological warnings, and integration of existing Automatic Identification System (AIS). In addition, NTCPWC will also carry out assessment of the existing VTS functionalities, hardware, software, identify suitable upgrade and provide technical proposal to VOC Port for the VTS system upgrade and maintenance.

The indigenous VTS software development would be carried out at a cost of Rs. 27,81,600/- and Operation, Manning and Maintenance of existing VTS shall be carried out at a recurring monthly charge of Rs. 2,56,200/-.

The present VTS is operational for more than 7 years and with the increase in Maritime Traffic, and advent of technological developments that have taken place globally in a rapidly changing Maritime Domain, the need for a more effective system offering higher

levels of safety and throughput was felt, and accordingly, the Port has proposed to upgrade the existing VTS system and develop an indigenous Vessel Traffic Software System.

The MoU signed with National Technology Centre for Ports Waterways & Coasts (NTCPWC), IIT Madras, for development of indigenous Vessel Traffic Software System will help to realize the vision of Hon'ble Prime Minister of India, Shri Narendra Modi, for building a 'Digital India' and using Digital Technologies for building 'Aatma Nirbhar Bharat'.

Speaking on the occasion, Shri T.K. Ramachandran, IAS, Chairman, V.O. Chidambaranar Port Trust, Tuticorin, stated that the "VOC Port is the first Indian Major Port of India to sign MoU with NTCPWC for development of Indigenous software for VTS System. The development of indigenous system by NTCPWC, as per VOC Port's requirement, instead of relying on proprietary and costly foreign made software solutions, will be a game changer in Indian Maritime Industry".

Professor Bhaskar Ramamurthi, Director, IIT, Madras, briefed about the collaboration between IIT, Madras and MoPSW; and Shri K Murali, Professor In-charge, NTCPWC, in his address stated that NTCPWC has all the infrastructure and expertise in place, required for development of the VTS system. NTCPWC has already taken up a Pilot project in Syama Prasad Mookherjee Port Trust (Kolkata Port) for development of Indigenous VTS software. It has also developed solar-powered hi-tech unmanned survey craft for Ports that can undertake autonomous surveys and transmit real-time data over long distances.

VTS is mandatory under IMO Convention 'SOLAS' (Safety of Life at Sea). The VTS traffic image is compiled and collected by means of advanced sensors such as radar, AIS, direction finding devices, CCTV and VHF or other co-operative systems and services. A modern VTS integrates all the information into a single operator working environment for ease of use and in order to allow for effective Maritime traffic organization and communication.

The above details were released in a Press Release by V. O. Chidambaranar Port Trust, today.

Public Relations Officer

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம்
व.उ.चिदम्बरनार पत्तन न्यास
V.O.Chidambaranar Port Trust
(Ministry of Ports, Shipping & Waterways, Government of India)
Administrative Office, Harbour Estate,Tuticorin - 628 004.
Tamilnadu
Public Relations Office
Tele Fax : 0461-2352360
Email id : provocport@gmail.com
Website : www.vocport.gov.in

மக்கள் தொடர்பு அலுவலகம்

பத்திரிக்கை செய்தி எண் : 3 தேதி :26.05.2021

**வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்பு கழகம் மற்றும் துறைமுகங்கள், நீர்வழி போக்குவரத்து கடலோர தேசிய தொழில்நுட்ப மையமும் இணைந்து துறைமுகத்தின் கப்பல் போக்குவரத்திற்கான இந்திய மென்பொருள் வடிவமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம்**

வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்பு கழகமும், துறைமுகங்கள் மற்றும் நீர்வழி போக்குவரத்து மற்றும் கடலோர தேசிய தொழில்நுட்ப மையம், இந்திய தொழில்நுட்பம் நிறுவனம், சென்னை (மத்திய துறைமுகங்கள், கப்பல் மற்றும் நீர்வழிப் போக்குவரத்து அமைச்சகத்தின் தொழில்நுட்ப பிரிவு) இணைந்து காணொலி காட்சி மூலம் இன்று 26.05.2021 புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

வ.உ.சிதம்பரனார் துறைமுகம் சார்பாக கேப்டன் பிரவின்குமார் சிங், துணை பாதுகாவலர், வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம் மற்றும் துறைமுகங்கள், நீர்வழி போக்குவரத்து மற்றும் கடலோர தேசிய தொழில்நுட்ப மையம், இந்திய தொழில்நுட்பம் நிறுவனம், சென்னை சார்பாக கே. முரளி, பேராசிரியர் அவர்களும், திரு தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப., வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்பு கழகத் தலைவர், திரு பிமல்குமார் ஜா, வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழக துணைத் தலைவர், திரு. பாஸ்கர் ராமமுர்த்தி, இயக்குநர், இந்திய தொழில்நுட்ப நிறுவனம், சென்னை மற்றும் மூத்த அதிகாரிகள் முன்னிலையில் காணொலி காட்சி மூலம் புரிந்துணர்வு ஒப்பந்த்ததில் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தம், 5 வருட பராமரிப்பு மற்றும் செலியின் வடிவமைப்பதற்கு செல்லுபடியாகும். மேலும் கூடுதலாக 5 வருடத்திற்கு ஒப்பந்தம் நீட்டிக்கப்படலாம்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்ததின் மூலம் துறைமுகங்கள், நீர்வழி போக்குவரத்து கடலோர தேசிய தொழில்நுட்ப மையம், தற்போதுள்ள தானியங்கி அடையாள அமைப்பின் ஒருங்கிணைப்பு மற்றும் நம் இந்திய நாட்டிலே முதன் முறையாக உருவாக்கப்பட உள்ள கப்பல் போக்குவரத்திற்கான மென்பொருள் செயலின் வாயிலாக கப்பல்களின் வருகையை கண்டறிதல், கப்பல்களை அடையாளம் காணுதல், கப்பல்களை கண்காணித்தல், கப்பல்கள் வருகையினை ஆய்வு செய்தல், கப்பல் பைலட்டுகளுக்கு தகவலை சரியான வகையில் தெரியப்படுத்துதல், வானிலை ஆய்வு தகவல்களை தெரியப்படுத்துதல் போன்ற வசதிகள் இந்த செயலியின் சிறப்பம்சங்கள் ஆகும். மேலும் கூடுதலாக துறைமுகங்கள், நீர்வழி போக்குவரத்து கடலோர தேசிய தொழில்நுட்ப மையமானது, வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் தற்போதுள்ள கப்பல் போக்குவரத்திற்கான செயலியின் செயல்பாடுகளின் வன்பொருள், மென்பொருள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதோடு பொருத்தமான மேம்படுத்தலைக் கண்டறிந்து கப்பல் போக்குவரத்திற்கான செயலியினை உருவாக்குவதற்கு இந்த தொழில்நுட்பம் பெரிதும் வழிவகுக்கும்.

வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில், இந்திய நாட்டிலே உருவாக்கப்பட உள்ள கப்பல் போக்குவரத்திற்கான மென்பொருள் செயலியானது ரூ. 27,81,600/- செலவில் அமைக்கப்பட உள்ளது. தற்போதுள்ள கப்பல் போக்குவரத்திற்கான மென்பொருள் செயலியின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு கட்டணமாக ரூபாய் 2,56,200/- மாதம் வழங்க உள்ளது.

தற்போதுள்ள கப்பல் போக்குவரத்திற்கான செயலியானது வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் 7 ஆண்டுகளுக்கும் மேலாக செயல்பாட்டில் இருந்து வருகிறது. மேலும் கப்பல் போக்குவரத்தின் அதிகரிப்பு, வேகமாக மாறிவரும் சர்வதேச வர்த்தகத்தில் உலகளவில் நிகழ்ந்த தொழில்நுட்ப முன்னேற்றங்கள், அதிகளவு பாதுகாப்பு மற்றும் அதன் செயல்திறனை வழங்க கூடிய மிக பயனுள்ள அமைப்பின் தேவையையும், அவசியத்தையும் கருத்தில் கொண்டு தற்போதுள்ள கப்பல் போக்குவரத்திற்கான மென்பொருள் அமைப்பை உருவாக்குவதற்கு வ.உ.சிதம்பரனார் துறைமுகம் திட்டமிட்டு செயல்படுத்த உள்ளது.

துறைமுகங்கள், நீர்வழி போக்குவரத்து கடலோர தேசிய தொழில்நுட்ப மையத்தின் மூலம் கப்பல் போக்குவரத்திற்கான இந்திய மென்பொருள் வடிவமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் வாயிலாக பாரத பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களின் 'சுயம் சார்ந்த பாரதம்' (ஆத்ம நிர்பார் பாரத்) திட்டத்தினை செயல்படுத்துவதற்கும், நவீன மென்பொருள் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி 'டிஜிட்டல் இந்தியா' (Digital India) திட்டத்தினை கட்டமைப்பதற்கும் உறுதுணையாக இருக்கும்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்த விழாவின் தலைமை உரையில் திரு. தா.கி. ராமச்சந்திரன், இ.ஆ.ப, வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகத் தலைவர் அவர்கள் 'இந்திய பெருந்துறைமுகங்களில் வ.உ.சிதம்பரனார் துறைமுகத்தில் முதன் முறையாக துறைமுகங்கள், நீர்வழி போக்குவரத்து கடலோர தேசிய தொழில்நுட்ப மையத்தினால் கப்பல் போக்குவரத்திற்கான இந்திய மென்பொருள் வடிவமைப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்ததில் கையொழுத்திடப்பட்டு செயல்படுத்தபட உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது என்று கூறினார். மேலும் அவர் மிகவும் பொருள் செலவு உள்ள வெளிநாடு மென்பொருளை உபயோகிப்பத்தை விட இந்தியாவில் உருவாக்கப்பட உள்ள இந்திய கடற்சார் வர்த்தகத்திற்கு பயன்படும் மென்பொருளானது பாதுகாப்பானது மற்றும் நம்பத்தகுந்தாகவும் இருக்கும் என்று கூறினார்.

திரு. பாஸ்கர் ராமமுர்த்தி, இயக்குநர், இந்திய தொழில்நுட்ப நிறுவனம் அவர்கள் உரையில் இந்த மென்பொருள் செயலியை உருவாக்குவதற்கான அனைத்து உள்கட்டமைப்பு வசதிகளையும், தொழில்நுட்பங்களையும் துறைமுகங்கள், நீர்வழி போக்குவரத்து மற்றும் கடலோர தேசிய தொழில்நுட்ப மையம் பெற்றுள்ளது என்று தெரிவித்தார். மேலும் துறைமுகங்கள், நீர்வழி போக்குவரத்து மற்றும் கடலோர தேசிய தொழில்நுட்ப மையமும் இதே போன்ற கப்பல் போக்குவரத்தின் திறனை மேம்படுத்துவதற்கான மென்பொருளை செயலியை உருவாக்குவதற்கு ஆய்வுகளை சையமா பிரசாத் முகர்ஜி துறைமுகத்தில் (கொல்கத்தா துறைமுகம்) மேற்கொண்டு வருகிறது என்று குறிப்பிட்டார். இந்த நிறுவனமானது துறைமுக கடல்பகுதியின் ஆழத்தினை கணக்கிடும் சூரியமின் ஆற்றல் மூலம் செயல்பட கூடிய தானியங்கி படகுகளை உருவாக்கி உள்ளது ஒரு சிறபம்சமாகும்.

சர்வதேச கடற்சார் அமைப்பானது (IMO) அனைத்து துறைமுகங்களிலும் கப்பல் போக்குவரத்தின் மென்பொருள் செயலியினை செயல்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மேலும் தானியங்கி அடையாள அமைப்பு, கண்காணிப்பு கேமரா, அதிக அதிர்வெண் கொண்ட தகவல் பரிமாற்ற கருவி, திசையை கண்டறியும் திசைமானி, அதிநவீன ரேடார் கருவி போன்ற கருவிகளில் இருந்து விவரங்களை சேகரித்து ஒருகிணைந்த வரைபடத்தில் கப்பல்களின் செயல்பாடுகளை காண முடியும்.

மேற்சொன்ன தகவலை வ.உ.சிதம்பரனார் துறைமுக பொறுப்புக் கழகம் இன்று வெளியிட்டுள்ள பத்திரிக்கை செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

மக்கள் தொடர்பு அதிகாரி